ஆனால் மத்திய அரசின் பொறுப்பும் வட்டார பொறியியல் கல்லூரிக்கு இருக்கிறது. எனவே திருச்சியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி தமிழக அரசால் மட்டும் நடத்தப்படுவதல்ல; மத்திய அரசினுடைய பிரதிநிதியும் அங்கு இருக்கிறார். அந்த மத்திய அரசுக்கு காஷ்மீரிலுள்ள அந்தக் கல்லூரி மூடப்படுகிற நிலைமை இருப்பது தெரியாமல் இருக்க முடியாது. எனவே ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரிக்கு மாறுவதற்கு மத்திய அரசினுடைய அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் மிக விரைவாக நமக்குத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. ஏனென்றால் இதிலே முதல் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான். அந்தக் கடமை அவர்கள் மூலமாக நிறைவேறுவதற்கு மாணவர்களுடைய வேண்டுகோளும் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கும் என்று கருதுகிறேன்.

(ஆ) என்.ஆர்.ஈ.பி.மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி.) திட்டங்கள் பேரூராட்சிகளுக்கு விரிவுப்படுத்தப்படாதது குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''என்.ஆர்.ஈ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற 'தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம்' கிராம ஊராட்சி மன்றங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இத்திட்டம் அமல்படுத்தப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதுவரை அரசின் ஆணை பிறப்பிக்கப்படாத காரணத்தால் இந்த நடப்பு ஆண்டில் இந்த திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே விரைவாக அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முயற்சி செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

11-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை முடிந்த பிறகு அந்தந்தத் துறையினுடைய மானியக்கோரிக்கை முடிவுற்றதற்குப் பிறகு தான் அரசு ஆணைகள் வழங்கப்படும் என்பதையும், முந்தாநாள் — 24 அன்றுதான் அந்த மானியக் கோரிக்கை முடிவுற்றிருக்கிறது என்பதையும் அது சம்பந்தப்பட்ட ஆணை விரைவாக அனுப்பப்படும் என்பதையும், நிச்சயமாக இந்த வருஷம் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதையும் நான் அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 அறிக்கைஅளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(6) சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில், ஒரு கொள்கைப் பிரச்சினை இருப்பதனால் இதை எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."